©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 356] CHENNAI, MONDAY, NOVEMBER 22, 2010
Karthigai 6, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி**

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வாளசிராமணி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. அ5/2790/2009.]*

**No. VI(2)/522(b)/2010.**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வாளசிராமணி ஊராட்சியின் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. க. ரெங்கசாமி என்பவர், 1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், அத்தியாயம் 5 சட்டப்பிரிவு 84 உட்பிரிவு (C)—ன்படி ஊராட்சி கணக்குகளை முறையாக பராமரிக்காததாலும், அத்தியாயம் 3 சட்டப்பிரிவு 46—ன்படி ஊராட்சி மன்றத் தலைவருக்குள்ள கடமைகளை செய்யத் தவறியதாலும், தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் நடைபெற்ற பணிகளுக்கான தினசரி வருகைப்பட்டியல்கள் மற்றும் படிவம்—I ஆகியவற்றில் உரிய பதிவுகள் மேற்கொள்ளாததாலும், அரசு பணம் கையாடல் செய்யப்பட்டதை தொடர்ந்து 1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205 உட்பிரிவு (11)—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி வாளசிராமணி ஊராட்சிமன்றத் தலைவர் திரு. க. ரெங்கசாமி என்பவரை பதவி நீக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்படி அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றிய வாளசிராமணி ஊராட்சி மன்றத் தலைவரின் பதவி நீக்கம் உறுதி செய்யப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி,
2010 நவம்பர் 19.

**மகேசன்காசிராஜன்,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-2 Ex. (356)